# திராவிடத்தால் வாழ்கிறோம்

861

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

113

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த அய்யம்பாளையம் ந.வீரப்பன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# ‘தமிழும் கழகமுமாக...’

## அய்யம்பாளையம் ந.வீரப்பன்

*1965*-ஆம் ஆண்டில், அன்றைய ஒன்றிய ஆட்சியின் இந்தித் திணிப்புக்கு எதிராக, தமிழ்நாடே கொந்தளித்துக் கொண்டிருந்தது. மாணவர்களும், இளைஞர்களும் வீதியில் இறங்கி, தமிழுக்காக முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். ‘விருகம்பாக்கம்’ அரங்கநாதன், ‘கோடம்பாக்கம்’ சிவலிங்கம் என கழகத் தோழர்கள் தியாகத் தீயாகத் தங்களையே எரித்து போராட்ட வேள்விக்கு உரமாக்கி இருந்தனர். அப்படியான தியாக மறவர்களுள் ஆசிரியராக இருந்த அய்யம்பாளையம் வீரப்பன் அவர்களும் என்றென்றும் உயர்த்திப் பிடிக்க வேண்டிய கழக உடன்பிறப்பு. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் எழுத்துகளால், பேச்சால் உரம் பெற்ற அந்த உடன்பிறப்பு, இன்றைய தலைமுறை அறிய வேண்டிய மொழிப்போர் தியாகி.

இன்றைய கரூர் மாவட்டம், ப.உடையாப்பட்டியில் வி.நல்லப்பன் - பொன்னம்மாள் ஆகியோருக்கு, இரண்டாவது மகனாக 1938-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி பிறந்தார் வீரப்பன். இவரது தந்தை நல்லப்பன், மிளகாய் வியாபாரம் செய்து வந்தவர். ஊர்தோறும் சென்று மிளகாய் வாங்கி, சந்தைகளில் விற்று, அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, தனது ஆறு பிள்ளைகளையும் படிக்க வைத்தார். மூத்த பிள்ளை கருப்பன் ஆசிரியராகப் பணியாற்றச் செல்ல, அவருக்கு அடுத்து பிறந்தவரான வீரப்பன், சொந்த ஊரிலேயே உள்ள ஆர்.சி. நடுநிலைப்பள்ளியில் படித்ததுடன், 1952-ஆம் ஆண்டில், உயர்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றார். 1955-ஆம் ஆண்டில், தனது அண்ணன் கருப்பன் அவர்களின் முயற்சியால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து, ஆசிரியராகத் தேர்ச்சி பெற்றார். வேலை பார்த்துக்கொண்டே படித்து, இடைநிலை ஆசிரியராகத் தேர்ச்சிபெற்று பணிக்குச் சேர்ந்தார்.

### தமிழும் கழகமும்..

பல்வேறு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர், 1962-ஆம் ஆண்டு முதல் க.அய்யம்பாளையம் நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியராகப் பணியற்றிய காலத்தில், திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட வீரப்பன், ‘திராவிட நாடு’ இதழில் அண்ணாவின் எழுத்துகளை வாசித்து, நேரடி அரசியலிலும் ஈடுபடலானார். அண்ணாவின் ‘தம்பிக்கு கடிதங்கள்’, கலைஞரின் உரைவீச்சுகள் வீரப்பன் அவர்களின் அரசியல் உணர்வுக்குத் தீவிர உரமூட்டின. பள்ளி நேரம் போக, மற்ற நேரங்களில், தனது தமிழ்ப் புலமையை வளர்த்துக் கொள்ளவும், கழகப் பணிகளில் ஈடுபடுவதுமாக தனது நாட்களை ‘தமிழும், கழகமுமாக’ வைத்துக் கொண்டார் வீரப்பன்.

கழகத் தோழர்களுடன் சேர்ந்து கரூர், திருச்சி, குளித்தலை போன்ற பகுதிகளில் நடைபெறும் கழகக் கூட்டங்களுக்குச் செல்வதும், அய்யம்பாளையம் கிராமத்தில் இளைஞர்களை ஊக்குவித்து, ‘இளைஞர் மன்றம்’ தொடங்கவும் செய்தார். திராவிட இயக்க ஏடுகளை அப்பகுதிக்கு வரவைத்து இளையோரிடம் அறிமுகம் செய்வது, அரசியல் பேசுவது என வீரப்பன் ‘கழகத்தின் ஆசிரியராக’ அப்பகுதி மக்களிடம் செல்வாக்கு செலுத்தி வந்தார்.


ஓவியம் : ரவி பேலட்

### இந்தி எதிர்ப்பு அலை

1963-ஆம் ஆண்டில் கழகம் அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்பு அறப்போராட்டம், அலை அலையாக தமிழ்நாடு முழுவதும் பற்றிப் படர்ந்து கொண்டிருந்தது. பலர் கைதான நிலையில், 1965-ஆம் ஆண்டு, தொடக்கத்தில் இளைஞர்கள், மாணவர்கள் கைகளில் போராட்டம் மிக வீச்சாக எழுச்சிகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இந்தித் திணிப்பை எதிர்த்து, தன் பள்ளி மாணவர்களையும், இளைஞர்களையும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தச் செய்த உணர்வுப்பூர்வமான தலைமையாசிரியராக இருந்தார் வீரப்பன்.

> இன்றும் ஆசிரியர் வீரப்பன் குடும்பத்தினர் கழகத்துடன் பயணிக்கின்றனர். கழகம் வீரப்பன் போன்றோரின் தியாகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, சென்னை, மதுரை என வெளியூர்களில், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டச் செய்திகளை, கழகத் தோழர்களுடன் ஆர்வமாக விவாதித்து வந்த வீரப்பன், தனது உடலையே போராட்டக் களத்தில் ஆயுதமாக்க முடிவுசெய்தார். ஒன்றிய அரசின் செவிகளில், தமிழர்களின் போர்க்குரல் தீயாக ஒலிக்க வேண்டும் என்பது அவர் எண்ணமாக இருந்தது.

### பள்ளிக்கு விடுமுறை

10.02.1965 அன்று, தீக்குளிப்பது என முடிவு செய்து, முதல் நாளே தன்னுடன் பணியாற்றிய முத்துசாமி என்கிற ஆசிரியரிடம் நாளை பள்ளிக்கு வர வேண்டாம் என கூறி இருக்கிறார். மாணவர்களிடமும் நாளை பள்ளிக்கு விடுமுறை என அறிவித்தவர், மண்ணெண்ணெய் உள்ளிட்டவற்றைத் தயார் செய்துள்ளார்.

அன்றிரவு, பள்ளிக் கரும்பலகையில் ‘தமிழ் வாழ்க, இந்தி ஒழிக’ என எழுதி வைத்ததுடன், “தமிழ்மொழியைக் காக்க என் உயிரை விடத்துணிந்து விட்டேன். என் முடிவுக்கு வேறு எந்தக் காரணமும் இல்லை. கடன் தொல்லையோ, காதல் தோல்வியோ இல்லை. என் சாவு மூலம் இந்த அரசு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தித் திணிப்பிலிருந்து பின் வாங்க வேண்டும். தமிழுக்கு நேரும் கேடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்” என விளக்கமாக மாவட்ட ஆட்சியர், முதலமைச்சர், பிரதமர் ஆகியோருக்குக் கண்டனக் கடிதங்களும், அண்ணா அவர்களுக்கும் கலைஞர் அவர்களுக்கும் ‘தமிழைக் காக்க முயற்சி செய்யுங்கள்’ என்று வேண்டுகோள் கடிதங்களும் எழுதினார்.

திட்டமிட்டபடியே, 11.02.1965 விடியற்காலை வெளியே வந்து, கொடிக்கம்பத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்துவிட்டு, தனது உடலில் தீயை வைத்துக்கொண்டு ‘இந்தி ஒழிக, தமிழ் வாழ்க’ என உரக்க முழக்கம் எழுப்பி இருக்கிறார்.

### திரண்டு நின்ற கழகத்தினர்!

பள்ளிக்கு முன்னால் பனையளவு மனித உருவம் எரிந்து கொண்டிருப்பது கண்டு, அருகில் சாவடியில் உறங்கிக் கொண்டு இருந்தவர்கள் ஓடிவந்து பார்த்தபோது, ஆசிரியர் வீரப்பன் கரிக்கட்டையாக வீழ்ந்துள்ளார். அது ஆசிரியர் வீரப்பன் என அறிந்து, காட்டுத்தீ போல செய்தி பரவியது. கழகத்தினர் திரண்டனர். மதுரையில் இருந்து மாணவர் போராட்ட படை பெருந்திரளாகத் திரண்டு வந்து, உடலை தங்களிடம் ஒப்படைக்குமாறும், தமிழ்நாடு முழுவதும் சுமந்து செல்லப்போவதாகவும் முழங்கி நின்றது.

அவர் உடல், மணப்பாறை மருத்துவமனைக்கு, மாட்டு எலும்பு வணிகரிடம் இருந்த மாட்டு வண்டியில் கொண்டு செல்லப்பட்டபோது, ஊரே மயான அமைதியில் உறைந்து கிடந்தது. வீதிகளில் திரண்ட கழகத்தினரை, காவல்துறை தடியடியில் கலைத்தது. 144 தடை உத்தரவு போடப்பட்டது. மணப்பாறை கழகத்தின் நகரச் செயலாளர் ஜெயராமன் தலைமையில் கழகத்தினர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்த, அவரது உடல் மணப்பாறையிலேயே தகனம் செய்யப்பட்டது.

பின்னாட்களில் மணப்பாறை கழக அலுவலகம் அருகிலேயே ஆசிரியர் வீரப்பனுக்கு நினைவகம் அமைத்தது கழகம். ஒவ்வொரு ஆண்டும் மொழிப்போர் ஈகியர் நாளில் கழகத்தினர் திரண்டு அய்யம்பாளையம் ஆசிரியரை நினைவு கூர்கின்றனர்.

பொங்கல் விழாவில், அய்யம்பாளையம் மக்கள் தவறாமல் ஆசிரியர் வீரப்பனுக்கு மரியாதை செய்கின்றனர். இன்றும் ஆசிரியர் வீரப்பன் குடும்பத்தினர் கழகத்துடன் பயணிக்கின்றனர். கழகம் வீரப்பன் போன்றோரின் தியாகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

...துடிக்கும்

## தமிழ்நாட்டுக்கு மட்டும் ஓரவஞ்சனை!

‘கேலோ இந்தியா’ திட்டத்தின் கீழ், கடந்த 8 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ரூ.29.5 கோடி மட்டுமே ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பாரதிய ஜனதா கட்சி ஆளும் குஜராத் மாநிலத்திற்கு 605 கோடி ரூபாயும், உத்தரப் பிரதேசத்திற்கு 509 கோடி ரூபாயும், ஹரியானா மாநிலத்திற்கு 180 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன என்ற விவரங்கள் கேலோ இந்தியா இணையதளப் பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ள தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

கடலூர், திருவாரூர் மற்றும் தூத்துக்குடியில் பல்நோக்கு விளையாட்டு அரங்குகள் மற்றும் தூத்துக்குடியில் ஹாக்கி மைதானம் உள்ளிட்ட முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக 12 புதிய முன்மொழிவுகளைக் கடந்த ஆண்டு ஒன்றிய அரசிடம் அளித்தது தமிழ்நாடு அரசு. ஆனால், இந்தத் திட்டங்கள் யாவும் ஒன்றிய அரசால் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை.

ஒரேயொரு மைதானத்திற்காக மட்டும், குஜராத் மாநிலம் 580 கோடி ரூபாயைப் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களில் உள்ள மாவட்டங்களுக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் தரப்படும்போது, தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களுக்கான திட்டப் பணிகளுக்கு மட்டும் ஏன் இந்தத் தாமதம் என்ற கேள்வி எழுகிறது.

திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக தமிழ்நாடு உருவெடுத்து வருகிறது. துணைநின்று ஊக்கப்படுத்த வேண்டிய ஒன்றிய அரசு, உரிய நிதியை ஒதுக்காமல், வஞ்சிக்கலாமா என்ற விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

ஏற்கெனவே, தமிழ்நாட்டுக்கு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்திற்கான நிதி விடுவிக்கப்படவில்லை, 2023-இல் தமிழ்நாடு கேட்ட பேரிடர் நிதி வரவில்லை, இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்ட நிதிக்குப் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது, ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதி காரணமின்றி தாமதப்படுத்தப்படுகிறது. இப்போது, அந்தப் பட்டியலில் ‘கேலோ இந்தியா’வும் சேர்ந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்




முரளி கிருஷ்ணன்

### நினைவில் நிற்கும் புகைப்படம்!

எங்களுடைய குடும்பம் நீண்ட காலமாக கழகப் பாரம்பரியம் கொண்ட குடும்பம், என்னுடைய துணைவியார் தங்கமலர் அவர்களது தந்தை பி.வி.வீரமணி, தர்மபுரி மாவட்ட முன்னாள் பொருளாளராக இருந்தவர். 2002-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை எங்கள் குழந்தைகளுடன் சென்று சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றோம், அப்போது வாஞ்சையுடன் இளைய பிள்ளையை அழைத்து, மடியில் அமர்த்திக்கொண்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது, என்றும் எங்கள் நினைவை விட்டு நீங்காத படம்.

**- முரளி கிருஷ்ணன், புது டெல்லி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பேச்சுரிமைக்குத் தடை!

1957-ஆம் ஆண்டு, டிசம்பர் 29-ஆம் தேதி, கழகத்தின் பொதுக்குழு நாகர்கோவிலில் கூடியது. அந்தக் கூட்டத்தில்தான், சென்னைக்கு வரும் பிரதமர் நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதையடுத்து, கழகத்தினர் கூட்டம் நடத்துவதற்கும், பேசுவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131